BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# சமூக மதிப்பீடுகளை இழக்கும் கைம்பெண்கள்

**முனைவர் ச.ஸ்டாலின் சத்தியா**

தமிழ்த் துறைத் தலைவர், எஸ்.ஏ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவேற்காடு, சென்னை - 600 077.

மின்னஞ்சல்: stalinsathiya2011@gmail.com ORICD ID: 0009-0003-5309-2471

**ஆய்வுச் சுருக்கம்**

மானுட சமூகத்தில் ஆணும் பெண்ணும் சரிசமமாக வாழ வேண்டும். ஆனால் சமூகத்தில் பெண்கள் எத்தகைய கட்டுப்பாடுகளை எதிர்கொள்ள நேர்ந்தது என்கிற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக மதிப்பீடுகளை இழக்கும் கைம்பெண்கள் எனும் கட்டுரை விரிவாக விளக்குகின்றது.

கட்டுரையின் ஆதாரமாக சங்ககால நூல்களான தொல்காப்பியமும், எட்டுத்தொகை ,பத்துப்பாட்டு ஆகிய நூல்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. கைம்பெண் ஆக இருப்பதினால் சமூகத்தில் எல்லோருக்கும் பொதுவாக இருக்கும் மதிப்பீடுகளை இழந்து வாழும் நிலையை தெளிவாக வெளிப்படுத்த சான்றாதாரங்களும், கட்டுரையின் இறுதியில் தொகுப்புரையும் அதனைத் தொடர்ந்து தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஆதாரங்கள் அடிக்குறிப்புகளாக கொள்ளப்பட்டுள்ளன.

**குறிச் சொற்கள்:**

கைம்பெண்கள், சமூக மதிப்பீடு, தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை

**முன்னுரை**

சங்க காலம் முதல் தற்காலம் வரை திருமணத்திற்கு பின் பிறந்த வீட்டில் பெற்றோருடனும் இணைந்து வாழ வில்லை. கணவனுடன் இணைந்து இன்ப வாழ்வு வாழ்ந்தனர். சங்ககாலத்தில் வாழ்ந்த பெண்கள் கணவரை பேணும் பண்புடையவர்களாக வாழ்ந்தார்கள். கணவனை இழந்த பெண்களை கைம்பெண்கள் என்றும், சமூகத்தில் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுவது, சுப நிகழ்ச்சிகளில் ஒதுக்கப்படுவது மற்றும் மறுமணம் மறுக்கப்படுவது போன்ற சமூக சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். சமூகத்தில் பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளில் மிகவும் முக்கியமானது கைம்பெண் பிரச்சனையாகும். கைமை எத்தகைய நிலையில் இருக்கின்றது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**கைம்பெண் - விளக்கம்**

கைம்பெண் என்றால் விதவை, கணவனை இழந்த பெண் என்று பொருள். ஆங்கிலத்தில் இதற்கு இணையான சொல் 'Widow' ஆகும்.

மனைவியை இழந்த ஆண்கள் எங்கனம் வாழ வேண்டும் என்ற வரையறையை சங்க இலக்கியங்களில் குறிப்பிடாதது சிந்திக்கத்தக்கது. மேலும் பெண்ணே கணவனுடன் இறந்துள்ளனர். பெண்களுக்கே கைமை நோன்புக்குரிய வாழ்க்கை நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. மனைவியை இழந்த ஆண்கள் கைம்பெண்களுக்கு கொடுக்கப்பட்ட வாழ்க்கை முறை போல் எதுவும் சொல்லவில்லை. மேலும் கைமை துன்பம் நிறைந்த வாழ்க்கையை வாழ்வதைவிட இறப்பதே மேல் என்ற நிலைக்கு வந்துள்ளனர் .

**சங்க இலக்கியத்தில் கைம்பெண்களுக்கு வழங்கப்பட்ட பெயர்கள்**

தமிழ்ச் சமூகத்தில் கணவனை இழந்த மகளிரை கைமை மகளிர் என அழைத்தனர். கணவன் இறந்தால் மனைவி இறக்க வேண்டும். ஆனால் மனைவி இருந்தால் கணவன் இறக்க வேண்டியதில்லை. கணவனை இழந்த பெண்களை சங்க இலக்கிய நூல்கள் பின்வருமாறு அழைக்கின்றன.

*1) கைம்மை (புறம். 125,126)*

*2) கழிகல மகளிர் (புறம். 280)*

*3) தொடிகழி மகளிர் (புறம். 238)*

*4) உயவர் மகளிர் (புறம். 246)*

*5) படிவ மகளிர் (நற். 273)*

*6) ஆளில் பெண்டிர் (நற். 353)*

என்ற பெயர்களில் சங்க இலக்கியங்கள் எடுத்தாளுகின்றன .

**அணிகலன் தவிர்த்தல்**

தமிழ்ச் சமூகத்தில் கணவனுடன் வாழ்கின்ற பெண்களே பல்வேறு அணிகலன்களை அணிந்து தங்களை அழகுபடுத்திக் கொண்டிருந்தனர். கணவனை இழந்த பெண்கள் அணிகலன்கள் அணிதல் கூடாது என்ற செய்தியினை சங்க இலக்கியத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. கரிகால் பெருவெளத்தான் மறைந்த பின்னர் அவனால் நலம் பெற்ற அனைவரும் வருந்தினர் . அவரது உரிமை மகளிர் தாங்கள் அணிந்திருந்த அனைத்து அணிகலன்களையும் அணியாமல் தவிர்த்தனர். இதனை அவரது இறப்பினை கண்டு கலங்கிய கருங்குழலாதனார் என்னும் புலவர்,

*"பூ வாட, கோவலர் பூவுடன் உதிரக்*
*கொய்து கட்டு அளித்த வேங்கையின்*
*மெல்லியல் மகளிரும் இழை களைத்தனரே"*

*(புறம் 224: 15 - 17 )*

என்று துயர்வுற்று பாடுகின்ற நிலையினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**கூந்தல் களைதல்**

பெண்களுக்கு அழகினை தருவது கூந்தல். அந்த கூந்தலை மயிலின் தோகைக்கும், கார்மேகத்திற்கும் ஒப்பிட்டு புலவர்கள் பாடியுள்ளனர். அழகிற்கு அழகு சேர்க்கும் விதமாக அகில் புகையூட்டியும், வாசனை திரவியங்களை பூசியும் அழகு படுத்துவர். இதனை ஐம்பால், சில்லைக் கூந்தல் என்றெல்லாம் சங்க இலக்கியங்கள் வர்ணிக்கின்றன. இந்த அழகு எல்லாம் கணவன் உயிருடன் இருக்கின்ற காலம் வரையிலுமே. கணவன் இறந்த பின்னர் தமக்கு அழகு தந்த கூந்தலை பெண்கள் களைந்தார்கள் .பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இறந்த செய்தியினை கல்லாடர் பாடிய போது,

*"மெய்ம் மறந்து பட்ட வரையாப் பூசல்*
*ஒள்நுதல் மகளிர் கைம்மை கூற*
*அவர் அறல் கடுக்கும் அம்மென்*
*குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே"*

*( புறம். 25: 10 - 14)*

என்று பாடுகின்றார். பாண்டியன் நெடுஞ்செழியனே நீ பகைவரை போர்க்களத்தில் வீழ்த்துவதால் பகைவரது மனைவியர் கைமையை விரும்பி ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது என்று எடுத்துரைக்கின்றார்.

**விருந்தோம்பலில் தொய்வு**

தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் மிகவும் உயர்வாக கருதப்படுகிறது. விருந்தோம்பல் என்பது வீட்டிற்கு வரும் விருந்தினர்களை இன்முகத்தோடு வரவேற்று அன்போடு உபசரிக்கும் உயரிய பண்பாகும். கணவன் மனைவி இருவருமாக இணைந்து விருந்தினர்களை வரவேற்க வேண்டும். விருந்து என்பதற்கு 'புதுமை' என்பது பொருள். முன் பின் அறியாத புதியவர்களையோ அல்லது எதிர்பார்க்காமல் வீட்டிற்கு வரும் விருந்தினரையோ உபசரிப்பதே உண்மையான விருந்து.

தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் விருந்து என்பதற்கு தெளிவாக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

*"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்"*

*(தொல்.கற்பியல்-11)*

விருந்தினரை உபசரித்தலும், உறவினர்களை காத்தலும் தான் ஒரு தலைவியின் தலையாயக் கடமை என்று சுட்டிக் காட்டுகின்றார்.

இல்லறத்தில் கணவன் மனைவி இருவரும் இணைந்து தான் விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்பதை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் புலப்படுத்தி இருக்கின்றார்.அதில் இல்லறத்தில்,

*"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்*
*துறவோர்க்கு எதிர்த்தலும் தொல்லோர் சிறப்பின்*
*விரிந்தெதிர் கோடலும் இழந்த என்னை"*

*(சிலம்பு.71-73)*

கோவலன் சூழ்ச்சியின் காரணமாக இறந்து விடுகிறான். இதன் காரணமாக தான் இல்லறத்திலிருந்து ஆற்றக் வேண்டிய விருந்தோம்பல் என்று சொல்லப்படுகின்ற ஒரு உயரிய பண்பினை நான் இழந்துவிட்டேன் என்று புலம்புகின்றாள்.

இதன் மூலம் கணவனை இழந்த கைம்பெண்கள் விருந்தோம்பல் என்னும் அறத்தினை கூட நிறைவேற்ற முடியாத நிலையில் இருந்தார்கள் என்ற செய்தியை அறிந்து கொள்ள முடிகிறது.

**மறுமணம் மறுப்பு**

கணவனை இழந்த மகளிருக்கு மறுமணம் நடந்ததற்கான ஆதாரம் சங்க பாடல்களில் இருப்பதாக தெரியவில்லை. ஒரு பெண் ஒருமுறை மட்டும் மணம் புரியலாம் என்கிற செய்தியைக் கலித்தொகைப் பாடல் ஒன்று வெளிக் காட்டுகின்றது.

*"அருநெறி ஆயர் மகளிர்க்கு*
*இருமணம் கூடுதல் இல்லியல் பின்றே"*
*(கலி. பாடல் 114: 20 - 21)*

அரசியல் காரணமாக தூது சென்றிருக்கிறார்கள். சிறந்த கவிஞர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய நிலை உயர்வானதாக இருந்ததாக அறிய முடியாத நிலையில் தான் இருந்திருக்கிறார்கள். ஆண்கள் எந்த இடத்திலும் உடன்கட்டை ஏறியதாக செய்திகள் இல்லை ஆனால் பெண்கள் மறுமணம் என்பதை தவிர்த்து உடன்கட்டை ஏறி உயிர் துறந்த செய்தியை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

சங்க காலம் தமிழர்களின் பொற்காலம் என கருதப்படுகிறது. சங்க காலத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் மதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று ஆய்வுகளும், கட்டுரைகளும் வெளிவந்து கொண்டே இருந்தாலும் உண்மையில் கணவனை இழந்த சங்ககால மகளிர் நிலை குறிப்பிடும் படியாக இல்லை என்பதே உண்மை. திருமணத்திற்கு முன்பிருந்தே பூச்சூடி, வளையல் அணிந்து, நல் உணவு உண்ட மகளிர் கணவனை இழந்த பிறகு அனைத்தையும் துறந்தவராகின்றனர். கணவன் இறந்த பின்னர் தமக்கு அழகு தந்த கூந்தலைப் பெண்கள் களைந்தனர். அதோடு நின்று விடாமல் தாங்கள் அணிந்திருந்து அனைத்து அணிகலன்களையும் அணியாமல் தவிர்த்தனர். கணவனும் மனைவியும் இணைந்து வாழ்வதுதான் இல்லறம். அதுபோல் கணவனும் மனைவியும் இணைந்து தான் விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்க வேண்டும் என்ற சிந்தனைகளும் வெளிப்படுகின்றது. ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் மதிக்கப்படுவதென்றால் சமூகத்தில் அனைத்து நிகழ்வுகளும் பொதுவானதாக அமைதல் வேண்டும் அப்போது தான் சமூக மதிப்பீடுகளை இழக்காமல் உயர்வு பெற முடியும்.

**துணைநூல் பட்டியல்**


1. இளம்பூரணர் (உரையாசிரியர்), தொல்காப்பியம் பொருளதி காரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 108, 1986
2. புலியூர்க்கேசிகன், கலித்தொகை, வளர்தமிழ் நூலகம், பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 13, 2000
3. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், பாரி நிலையம், சென்னை- 600108, 1958
4. புலியூர்க்கேசிகன், நற்றிணை, சாரதா பதிப்பகம் ,சென்னை, 2010
5. புலியூர்க்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2010